# மாலை முரசு

பக்கங்கள் 15+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 15 செவ்வாய்க்கிழமை 02.12.2025 | அதிர்வு 125


அனர்த்தத்தால் இடைநிறுத்தப்பட்ட

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளை ஜனவரியில் நடத்தத் தீர்மானம்




இலங்கையில் அனர்த்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை 02


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




இலங்கையை உலுக்கிய பேரிடர்:

# 400 ஐத் தாண்டிய சாவு எண்ணிக்கை

## 336 பேரைக் காணோம்

இலங்கையில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 410 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 336 பேர் காணாமல்போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று காலை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 02

## முன்னாள் அமைச்சர் ரத்நாயக்க கைது!



முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நடத்தப்பட்டு வரும் விசாரணை ஒன்று தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சி.பி. ரத்நாயக்க, அந்த ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் எப்போது மீள ஆரம்பம்?

மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் அனர்த்த நிலைமையை மதிப்பாய்வு செய்த பின்னர், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் மின் தடைகளால் பாதிக்கப்படாத மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மட்டும் டிசம்பர் 16 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார்.

ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து விரைவில் முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




இதேவேளை, பேரிடர்களால் பாதிக்கப்படாத பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் டிசம்பர் 8 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்றும் நாலக கலுவெவ மேலும் தெரிவித்துள்ளார்.



# இக்கட்டான நேரத்தில் இந்தியா பெற்றுத் தரும் ஆதரவுக்குத் தூதுவரிடம் சஜித் நன்றி தெரிவிப்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவை மேலும் வலுப்படுத்தி, இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கையின் நெருங்கிய நண்பராக எம்மோடு சேர்ந்து உயிர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் மகத்தான பங்களிப்பை ஆற்றியமைக்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை இன்று சந்தித்த வேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் தனது மரியாதையையும் நன்றியையும் தெரிவித்தார்.

டித்வா சூறாவளி புயலால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கும், இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடித் தலையீட்டின் பிரகாரம் இந்திய அரசுக்குச் சொந்தமான சாகர் பந்து திட்டத்தின் கீழ் கப்பல்கள், நிவாரணக் குழுக்கள் மற்றும் இந்திய விமானப் படையின் விசேட பங்களிப்பு என்பவற்றை இலங்கைக்குப் பெற்றுத் தந்ததன் மூலம் பேரழிவால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்களை மீட்க முடிந்தது என்றும், பேரிடர் நிவாரணக் குழுக்கள், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், கூடாரங்கள் மற்றும் விசேட மீட்புக் குழுக்கள், மருத்துவர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள், நடமாடும் வைத்தியசாலை சேவை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான பல உதவிகள் சகிதம் இந்திய அரசு பெற்றுத் தந்துகொண்டிருக்கும் ஆதரவை வார்த்தைகளில் சொல்லி முடிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரிவித்தார்.

மனிதாபிமான உதவிகளை நிரப்பிக் கொண்டு பாகிஸ்தான் விமானங்கள் இலங்கைக்கு வரும்போது, இந்திய வான் பரப்பைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கி, இந்திய அரசு எடுத்த இந்த முக்கிய தீர்மானத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராட்டுக்களை வெளிப்படுத்தி இந்திய அரசுக்குத் தனது நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்திய – பாகிஸ்தான் மோதல்கள் காணப்பட்ட போதிலும், இதுபோன்ற ஒரு மனிதாபிமான பிரச்சினை எழுந்த நேரத்தில், இந்திய அரசு எடுத்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை மிகவும் பாராட்டுகின்றேன் என்றும், நெருங்கிய நண்பராக இந்தியா இந்த நேரத்தில் இலங்கையுடன் இருப்பது ஒரு நாடாக எமக்குப் பெரும் பக்கபலமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் தெரிவித்தார்.



## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் மீதமுள்ள பாடங்களை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இன்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ அறிவித்துள்ளார். எனினும், ஜனவரி மாதம் பரீட்சை நடைபெறும் திகதிகளை அவர் அறிவிக்க வில்லை.

## 400 ஐத் தாண்டிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், 4 இலட்சத்து 7 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த 14 இலட்சத்து 66 ஆயிரத்து 615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே 1,441 பாதுகாப்பு தங்குமிடங்களில், 64 ஆயிரத்து 483 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 33 ஆயிரத்து 15 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# அன்புருவான புத்தரின் சிலையை ஆக்கிரமிப்புக் குறியீடாக்க வேண்டாம்

## சிறிநேசன் எம்.பி. இவ்வாறு தெரிவிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

அன்புருவான புத்தரின் சிலையை, ஆக்கிரமிப்பின் அடிப்படைக் குறியீடாக மாற்ற வேண்டாம் என்று சிறிநேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்து மதத்தைத் தாய் மதமாகக் கொண்ட சித்தார்த்தர், பௌத்த மதத்தை உருவாக்கிக் கௌதம புத்தரானார். அவர், பகுத்தறிவாத அறிவியல் மார்க்கமாக பௌத்த மதத்தை வடிவமைத்தார்.

இவர் அறவழி, அன்புவழி , அகிம்சை வழியை மக்களுக்குக் காட்டினார். அதனால்தான் புத்தரை அன்பே வடிவமானவர் என்று கூறுவர். அப்படியான அன்பு மயமான புத்தரை இலங்கையில் ஆக்கிரமிப்பின் அடையாளமாகக் காட்டுவதற்குச் சில அடிப்படைவாத பௌத்தர்கள் மற்றும் அவர்களது அரசியல் வாதிகள் மற்றும் அடாவடியர்கள் முற்படுகின்றார்கள். அந்தவகையில்தான், அண்மையில் திருகோணமலைக் கடற்கரையின் ஒரு பக்கமாக நிறுவப்பட்ட புத்தர் சிலை காணப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனை முதலில் தடுக்க முயன்ற பொலிஸார் பின்னர், பௌத்த குருமார்களின் மேலாதிக்கத்துக்கு அடிபணிந்து விட்டார்கள் என்ற கருத்து வெளிவந்துள்ளது.

அமைதியாக வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் அடிப்படைவாதத்தை மீண்டும் விதைப்பதற்கு, பேரினவாதிகள் துடிக்கின்றனர். இதன் மூலம் மக்களைக் குழப்பி மீண்டும் ஊழல் மோசடிப் பேரினவாதிகளை மீண்டும் ஆட்சி மேடைக்குக் கொண்டு வர விரும்புகின்றனர்.

இந்த விடயத்தில் இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு நீதியாக செயற்பட வேண்டும். மேலும், தொல்லியல் திணைக்களமானது தொல்லியல் என்றால், பௌத்த கலாசாரம் என்ற மனோநிலையில் செயல்படக்கூடாது.

புத்தரின் மார்க்கத்தை ஏற்றுப் பல நாடுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. ஜப்பான் சீனா, தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகள் இதற்கு உதாரணங்களாகும். ஆனால், புத்தரைப் பூசிப்பதாகக் கூறி ஜனநாயகத்தையும், மனிதவுரிமைகளையும் மிதித்த நாடுகளாக, இலங்கை, மியன்மார் ஆகிய இரு நாடுகள் உள்ளன. இந்த நாடுகள் அடிப்படைவாத பிற்போக்குவாதத்தால் மனித உரிமைகளை மதிக்காமல், ஏனைய இன மக்களை ஒதுக்குவதிலும், ஒடுக்குவதிலும், அழிப்பதிலும் முனைப்பாகச் செயற்பட்டு வந்துள்ளன. இதனால், அன்பு வடிவான புத்தரை ஆக்கிரமிப்பின் அடையாளமாகக் காட்டுகின்றனர்.

இந்த நிலையில், இலங்கை இன முரண்பாடு, இனப்பகை, இனப்போரால் சீர்குலைந்து வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. 70 ஆண்டுகளில், இந்த நிலை ஏற்பட்டும், பேரின அடிப்படைவாதிகள் திருந்தாமல் உள்ளனர். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை ஆக்கிரமித்தவர்கள் மட்டக்களப்பை ஆக்கிரமிப்பதில் முனைப்புக் காட்டுன்றனர். மட்டக்களப்பின் எல்லைக் கிராமமான வடமுனை நெடியகல் மலையில் பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த வழிபாட்டுத் தலம் அமைக்கப்படுகின்றது. மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தேசிய மக்கள் சக்தியும் கண்டு கொள்ளவில்லை.இதுதான் பௌத்தத்தின் மேலாதிக்க நிலை என்பதைத் தமிழர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தியாவில் போர் வெறியோடு நின்ற அசோக சக்கரவர்த்தியை நேர் நெறியனாக்கி நல்ல பௌத்தனாக, உபகுப்தர் என்னும் பிக்கு மாற்றினார். இலங்கையில் நேர்நெறியில் வாழக்கூடியவர்களையும் போர் வெறியர்களாக மாற்றும் பிக்குகள் சிலரும் உள்ளனர்.இதுதான் நாட்டின் சாபக்கேடாக உள்ளது.- என்றார்.

# முல்லை. அனர்த்த முகாமைத்துவப் பிரிவை சந்தித்து விவரம் அறிந்தார் ரவிகரன் எம்.பி.!

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் எஸ். கோகுல்ராஜைச் சந்தித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். முல்லைத்தீவு மின்சார சபைக்கும் சென்று மின்னிணைப்புப் பாதிப்புக்களைச் சீர்செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்தப் பாதிப்புத் தொடர்பான விவரங்களை உரிய அமைச்சுகளின் கவனத்துக்குக் கொண்டுசென்று அந்தப் பாதிப்புக்களைச் சீர்செய்வதற்க தம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி அனர்த்தம் தொடர்பான கூட்டமொன்று இடம்பெற்றது. இக் கூட்டத்தில் நானும் பங்கேற்றிருந்தேன். மேலும் குறித்த கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், படையினர், பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரும் பங்கேற்றிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் அனர்த்தத்தில் இருந்து மக்களைப் பாதுகாப்பது மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பின்பு கொழும்புக்குச் சென்று நாடாளுமன்றத்தில் உரிய அமைச்சுக்களைச் சந்தித்து அனர்த்த நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன், அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பிலும் உரிய அமைச்சுக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தேன். இந்த நிலையில் கொழும்பில் இருந்து வருகைதந்து அனர்த்த முகாமைத்துவ பிரிவினரை சந்தித்து அனர்த்தம் தொடர்பிலான விவரங்களைப் பெற்றுக்கொண்டேன்.

அந்தவகையில் அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களை உரிய அமைச்சுகளுக்கும் கொண்டு சென்று அந்தப் பாதிப்புக்களை சீர்செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். அத்தோடு மின்சார சபையினரையும் சந்தித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்னிணைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை விரைவில் சீர்செய்யுமாறும் வலியுறுத்தியிருந்தேன். விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு மின்னிணைப்புகள் சீர்செய்யப்படுமென மின்சாரசபையினராலும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்தப் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள மக்களையும் நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளேன். - என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காத்திருக்கும் போராட்டம்

நாட்டைச் சூறையாடிய புயல் ஓய்ந்து விட்டது. அது ஏற்படுத்திய மோசமான பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணி இப்போது தீவிர கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இந்தச் சமயத்தில்தான் இன்னொரு பேரழிவிலிருந்து - சூறையாடலிலிருந்து - நாட்டையும் மக்களையும் சமூகத்தையும் காக்கும் மற்றொரு மீட்பு முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டி இருக்கின்றது.

அது - சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டையும் மக்களையும் கொள்ளையிடும் கொடுங்கரங்களில் இருந்து சமூகத்தைக் காப்பாற்றுவதாகும்.

பொதுவாக இத்தகைய இயற்கைப் பேரிடர்கள், அனர்த்தங்களை அடுத்து இத்தக் கொடுங்கரங்களின் கைவரிசை கட்டவிழத் தொடங்கும். அது வழமை. இந்த முறை அதற்கு எதிராக மக்களும் நாடும் முழு முனைப்புடன் செயல்பட்டாக வேண்டும்.

அரசு துறைகளிலும், தனியார் துறைகளிலும் இந்தக் கொடூரக் கரங்கள் எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று வழிமேல் விழி வைத்து பார்த்திருக்கின்றன.

நெருக்கடியான கட்டத்தில் மக்களும் நாடும் இருப்பதால் அவர்களுக்கான மீட்புப் பணி, நிவாரண வேலைகள், ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகள் போன்றவை விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. அதற்காக அரச நிதி மற்றும் உதவும் தரப்புகள் மூலம் கிடைக்கும் உதவிகள், நன்கொடைகள் போன்றவை தாராளமாகவும் விரைந்தும் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையும் இருக்கின்றது. அதில் சிவப்பு நாடா கட்டுப்பாடுகளை தவிர்ப்பதற்காக சில நெகிழ்வுப் போக்குகளை - தளர்த்தல்களை - அரசு ஏற்கனவே அறிவித்துவிட்டது. பாதிப்புற்ற மக்களுக்கு தாமதமின்றி, விரைந்து உதவிகள் கிட்டுவதை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து இறுக்கமற்ற போக்கை அரச நிர்வாகமும் கைகொள்ள வேண்டி இருக்கும். இதனைப் பயன்படுத்தித் தமது கைவரிசையைக் காட்ட அரசு நிர்வாகத் தரப்புக்கள் சில காத்திருக்கின்றன.

நிவாரண நடவடிக்கைகளிலும், மீள் கட்டுமானங்கள் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளிலும் எப்படிச் சூறையாடலாம் என்று அவை பார்த்திருக்கின்றன.

அதே போல வர்த்தக நடவடிக்கைகளிலும் பிற விடயங்களிலும் தனியார் துறையின் சில தரப்புகள் தங்கள் கொடூரக் கரங்களை ஏவி விடப் பார்த்திருக்கின்றன.

புயல் அடித்த உடனேயே - வெளியிலிருந்து புதிய பொருள்கள் விற்பனைக்கு வர முன்னரே - கொழும்பில் கையிருப்பில் இருந்த தேங்காய்களை இரண்டு, மூன்று மடங்கு விலைக்கு விற்பனை செய்யத் தொடங்கிய வர்த்தகர்கள் இருக்கிறார்கள். கையிருப்பில் இருந்த பச்சை மிளகாயை கிலோ 4,000 ரூபாவுக்கும் கரட்டை 5,000 ரூபாவுக்கும் விற்ற வர்த்தகப் பெருச்சாளிகள் நம் மத்தியில் உண்டு.

பேரிடர் பாதிப்பின் விளைவுகளைத் தங்களுடைய இத்தகைய சூறையாடல்களுக்குப் பயன்படுத்த காத்திருக்கும் அரச அதிகாரிகள், ஊழியர்கள், தனியார் துறையினருக்கு எதிராக ஒரு பேரிடர் காலப் போராட்டம் கட்டமைப்பக்கப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு தேவை இப்போது காத்திருக்கிறது.



# திருநெல்வேலியில் இளைஞர் வெட்டிக் கொலை; சூத்திரதாரி உட்பட ஆறு சந்தேக நபர்கள் கைது!

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் இளைஞரொருவர் ஓட ஓட வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட ஆறு பேர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டனர்.

கொலைச் சம்பவத்துக்கு பின்னர் இந்தக் கும்பல் ஹயஸ் வானில் யாழ் மாவட்டத்தை விட்டு வெளி மாவட்டத்திற்கு தப்பிச் சென்றபோது யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது ஹயஸ் வாகனம், இரண்டு மோட்டார் சைக்கிள்கள், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி, ஆடைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நீண்டகாலமாக இரண்டு வன்முறைக் கும்பலிடைய காணப்பட்ட பகைமை உணர்வே இந்தக் கொலைச் சம்பவத்திற்கு காரணம் என்பது ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணத்தில் சில மாதங்களுக்கு முன்பு இரண்டு வன்முறை கும்பலைச் சேர்ந்த நபர்களிடையே மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தேக நபருக்கு பிணை வழங்க மற்றைய தரப்பு தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்து வந்துள்ளது.

அதேவேளை அதற்குப் பழிதீர்க்கும் முகமாக சிறைக்குள் உள்ள நபரின் வழிகாட்டலுக்கமைய தெல்லிப்பழையில் வட்டி தொழில் செய்யும் ஒருவரிடம், பழி தீர்க்கும் கொலைத் தாக்குதலுக்கான திட்டம் கொடுக்கப்பட்டது.



இதன்படி பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வன்முறை கும்பலைச் சேர்ந்த நபர்கள் இணைக்கப்பட்டு தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டது.

கொலை செய்யப்பட்ட நபரின் வீட்டில் அருகில் வசிக்கும் நபர் ஒருவரும் இதற்கு ஒத்துழைத்துள்ளதுடன் பிரத்தியேக கையடக்கத் தொலைபேசிகள், சிம்கள் வாங்கப்பட்டு அதன் ஊடாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திட்டமிட்டபடி தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை திட்டத்தை மேற்கொண்ட வட்டித் தொழில் செய்பவர் தனது ஹயஸ் வாகனத்தில் ஏற்றி தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும் யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தனியான விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவ இடத்தில் பதிவான காணொளி, கொலலப்பட்ட நபரின் பின்ண்ணி என்பவற்றை வைத்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்றையதினம் குறித்த கொலையை புரிந்தவர்கள், ஒத்துழைத்தவர்கள், திட்டம் தீட்டியவர்கள் என்ற சந்தேகத்தில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 20 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்டோர் எனவும் நயினாதீவு, கொக்குவில், தெல்லிப்பழைப் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதற்கு உடந்தையாக இருந்த மேலும் இருவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான ஆறு பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.






# பாதிப்புற்றோருக்கு உணவுப் பொதிகள் சாயி நிலையத்தினர் இன்று விநியோகம்

கொழும்பு புறநகர் பகுதியான சேதவத்தைக்கு இன்று கொழும்பு புதுச் செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலைய தொண்டர்கள் களவிஜயம் மேற்கொண்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சமைத்த உணவுப் பொதிகளைப் பகிர்ந்தளித்தனர்.









# இடர் முகாமைத்துவக் குழுக்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குக!

## *வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வேண்டுகோள்*

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு உதவுவதற்கு உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகள் ஆர்வத்துடன் முன்வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. எனினும், இவ்வுதவிகள் பயனாளிகளைச் சரியான முறையில் சென்றடைவதையும், மோசடிகள் இடம் பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்த, அந்தந்த மாவட்டச் செயலர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இடர் முகாமைத்துவக் குழுக்களை தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. முகவர் அமைப்புக்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

பல தரப்பினரும் உதவிகளை வழங்கத் தயாராக உள்ளனர். இருப்பினும், அனைவரும் ஒரே வகையான உதவிகளை வழங்குவது மக்களின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யாது. மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் தேவைகள் கண்டறியப்பட்டு, அதற்கேற்ப உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.



சில இடைத்தரகர்கள் அல்லது குழுக்கள், உதவிகளை வழங்குவதாகக் கூறி வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்குப் பெயரளவில் மட்டும் சிறிய உதவிகளை வழங்கிவிட்டுப் ஒளிப்படங்களை அனுப்புவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறான மோசடிகளைத் தடுக்க, நன்கொடையாளர்கள் மாவட்டச் செயலகத்தின் 'தேவைப் பட்டியலை' பெற்றுக்கொண்டு உதவிகளை வழங்குவதே சிறந்தது.

அரசு அத்தியாவசிய நிதியையும் நிவாரணங்களையும் வழங்கி வருகிறது. எனவே, அரசால் வழங்கப்படும் நிவாரணங்களுக்கு அப்பால், மக்களுக்குத் தேவைப்படும் ஏனைய உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களும், நன்கொடையாளர்களும் வழங்குவது பொருத்தமாக இருக்கும்.

மக்கள் நலன்புரி நிலையங்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதால், அவர்களின் தேவைகள் மாறுபடும். வாழ்வாதார உதவிகள் மற்றும் மீள்குடியேற்றத் தேவைகளை அறிந்து உதவுவது அவசியம்.

அரசால் உருவாக்கப்பட்டுள்ள நிவாரண நிதியத்துக்கும் புலம்பெயர் உறவுகள் நம்பிக்கையுடன் நிதியுதவிகளை வழங்கி வருகிறது என்றும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஐ.நா. முகவர் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். தமது நிவாரணப் பணிகளை மாவட்டச் செயலகங்களின் ஒருங்கிணைப்புடனேயே முன்னெடுப்பதாக உறுதியளித்தனர். இடர் முகாமைத்துவக் குழு இணைப்பாளர்களது விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க விரும்புவோர் பின்வரும் மாவட்டச் செயலக பதவிநிலை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்: சுரேந்திரநாதன் – 077 484 0199, கிளிநொச்சி: அஜித்தா – 077 565 0671,

மன்னார்: பிரதீப் – 071 990 5324, வவுனியா: கமலதாசன் – 077 613 8369, முல்லைத்தீவு: ரஜினிகாந்த் – 077 370 7720 / கோகுலராஜ் – 077 395 7886.













# களுத்துறையிலிருந்து நுவரெலியாவுக்கு உதவி: அனர்த்த மீள்கட்டமைப்புப் பணிகள் ஆரம்பம்!

(ஆர்.எப்.எம்.சுஹெல்)

களுத்துறை மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு பெரிய குழு இன்று நுவரெலியா மாவட்டத்தின் பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுகட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கும் வருகை தந்தது.

நிவாரணத் திட்டம் கினிகத்தேன நகரில் தொடங்கியது. அங்கு களுத்துறையைச் சேர்ந்த குழு அன்புடன் வரவேற்கப்பட்டது.

இந்த நிகழ்வில் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி நிலந்தி கொட்டச்சி, களுத்துறை மாவட்ட நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் உட்பட ஏராளமான கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா சுரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் ஷின்னன் கலேசெல்வி மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் திருமதி துஷாரி தென்னகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாதுகாப்புப் படையினரை பிரதிநிதித்துவப்படுத்தி, ஹட்டன் பிரிவுக்குப் பொறுப்பான மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் பிரதீப் வீரசேகர மற்றும் காவல்துறை அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கினிகத்தேன நகரத்திலிருந்து புறப்பட்ட களுத்துறை நிவாரணக் குழுக்கள், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொத்மலை, ரிகிலகஸ்கட, ஹங்குரான்கெத, நில்தண்டைன்ன, நுவரெலியா, நோர்வுட் மற்றும் அகரபத்தன ஆகிய பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தனித்தனியாக அனுப்பப்படவுள்ளன, அங்கு அவர்கள் உடனடியாக பேரிடர் மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்கத் தயாராகி வருகின்றனர்.

# நோட்டன் ஏழு கன்னி மலைத்தொடரில் நடந்த விபத்தின் 51 வருடங்கள் பூர்த்தி!

## 191 பேருக்கு மரணத்தை ஏற்படுத்திய பாரிய விமான விபத்து

(மஸ்கெலியா நிருபர்)

இலங்கையில் பாரிய விமான விபத்தொன்று ஏற்பட்டு நாளை மறுதினம் 4 ஆம் திகதியுடன் 51 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

1974 ஆம் ஆண்டு டிசெம்பர் 04 ஆம் திகதி இந்தோனேசியா புரோவெயார் விமான நிலையத்திலிருந்து புனித மக்கா யாத்திரை பயணிகள் மற்றும் பணியாளர்கள் உட்பட191 பேருடன் மக்கா நோக்கி பயணித்த விமானம் இரவு 10 மணியளவில் நோட்டன் பிரிஜ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திபர்டன் ஏழு கன்னி மலைத் தொடரில் மோதுண்டு, அதில் பயணித்த 183 பயணிகளும் அதன் பணியாளர்கள் 09 பேரும் அவ்விடத்திலேயே உயிரிழுந்தனர்.

இந்தோனேசியா புரோவெயார் விமான நிலையத்தில் இருந்து மக்கா நோக்கி பயணித்த டி.சி. 08 ரக இந்தோனேசியா விமானம் 36000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த நேரத்தில் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு விமானியால் கட்டுநாயக்க கட்டுப்பாட்டறையை தொடர்பு கொண்ட போது,



4000 அடிக்கு தாழ்த்துமாறு பணிக்கப்பட்டது.

அதன்படி பயணித்தபோது விமானத்தின் வலது பக்க வால் பகுதி ஏழு கன்னி மலையில் மோதுண்டதால் விமானம் வெடித்து சிதறியது. அதில் பயணித்த அனைவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நோர்வூட் காசல்ரீ நீர் தேக்கத்தின் மேலாக பயணித்த இந்தோனேசியா விமானம், அன்று இரவு 10 மணிக்கு விபத்துக்குள்ளாகி அனைவரும் உயிரிழுந்தனர் என்றும் அதில் பயணம் செய்த பணிப்பெண் ஒருவரது சடலம் மட்டும் அவரது காதலரால் ஹெலிகொப்டர் மூலமாக இந்தோனேசியாவுக்குக் எடுத்துச் செல்லப்பட்டது என்றும் அவ்விடத்திற்கு பார்வையிடச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான விமானத்தின் சக்கரம் ஒன்று இன்றும் ஞாபகார்த்தமாக நோட்டன் பிரிஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் முன்னால் காட்சி படுத்தப்பட்டுள்ளது. அதில் விமானத்தில் பயணித்த விமா னிகள் மற்றும் பணியாளர்களின் பெயர் களும் பொறிக்கப்பட்டுள்ளன.





# மன்னார் அனர்த்தம் தொடர்பாக அரச அதிபர் தலைமையில் ஆய்வு!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் டித்வா புயலால் உருவாகியுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

டித்வா புயலால் ஏற்பட்ட பேரிடர் நிலையில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள், பொதுமக்கள் பாதுகாப்பு, மற்றும் பல துறைகளின் ஒருங்கிணைப்பு தேவைகள் குறித்து விரிவாக ஆராய்வதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

நலன்புரி மையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அவசர மருத்துவ சேவைகள் வழங்கல், தண்ணீர் மாசுபாடு தடுப்பு மற்றும் நுளம்பு பெருக்கு கட்டுப்பாடு, குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் ஆகியோருக்கான சிறப்பு சுகாதார பராமரிப்பு, இடருக்குப் பிந்தைய தொற்று நோய் அபாயங்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் போன்ற சுகாதாரத் துறை தொடர்பிலான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

புயலால் சேதமடைந்த பயிர்களுக்கான ஆரம்ப மதிப்பீடுகள், கால்நடை வளர்ப்பில் ஏற்பட்ட சேதங்களுக்கு ஆதரவுத் திட்டங்கள், சேதமடைந்த விவசாய உட்கட்டமைப்புகளின் மறுசீரமைப்பு தொடர்பிலும் ஆராயப்பட்டது.

நீரேற்ற வாய்க்கால்கள், அணைகள் மற்றும் தடுப்பணைகளின் பாதுகாப்பு நிலை ஆய்வு, வெள்ளநீர் வெளியேற்றத்துக்கான அவசர நடவடிக்கைகள், நீர்ப்பாசனத் திட்டங்களில் நீர் மேலாண்மை கட்டுப்பாடுகள் தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் அடிப்படை வசதிகள், உணவு, குடிநீர், சுகாதாரம், சத்துணவு தொடர்பிலும் அரச அதிபர் கேட்டறிந்ததுடன், தொடர்ந்து கண்காணிக்க வேண்டியதையும் வலியுறுத்தினார்.

அனர்த்த சூழ்நிலையில் முப்படையினர், பொலிஸ், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்கள் வழங்கும் அர்ப்பணிப்புமிக்க சேவைகள் பாராட்டப்பட்டன. மேலும், சீரற்ற வானிலை தொடர்பான அவசர நிலைகளை எதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட மேலதிக அரச அதிபர்கள், நகர சபை பிரதேச உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள், ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.






# பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் புதையல் தோண்டும் நவீன கருவி மீட்பு!

(பாறுக் ஷிஹான்)

புதையல் தோண்டும் நவீன கருவி ஒன்று மீட்கப்பட்ட விடயம் தொடர்பில் பல்வேறு பாதுகாப்பு தர பிரிவுகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள புறநகர் பகுதி வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் புதையல் தோண்டும் நவீன கருவி மீட்கப்பட்டிருந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய மாலை குறித்த கருவி மீட்கப்பட்டு பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஜேர்மனி நாட்டு தயாரிப்பிலான குறித்த கருவி நிலத்தடியில் உள்ள தங்கம் உட்பட புதையல்களை இலகுவாக கண்டறியக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான புலன்விசாரணைகளை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான பி.கஜேந்திரனின் வழிகாட்டுதலில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# அம்பாறை கரையோர பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர்!

(பாறுக் ஷிஹான்)

நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக் கிணங்க நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் வித ாரண நேற்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டுள்ளார்.



நிலவிவரும் சீரற்ற காலநிலை, வெள்ளப்பெருக்கு மற்றும் தொடர்மழை போன்ற பல இயற்கை அனர்த்தங்களை முகம் கொடுக்கும் அம்பாறை மாவட்ட மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, நீர்ப்பாசனம் மற்றும் காணி பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண ஆகியோர் நேரில் சந்தித்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளை மீள் உறுதி செய்தல் தொடர் பான நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டது. இந்த விஜயத்தின் போது தேசிய மக்கள் சக்தியின் பிரதேச ஒருங்கிணைப் பாளர்கள், பிரஜா சக்தி தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

---





# மன்னாரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு நிவாரணங்கள் வழங்கல்!

## நாடாளுமன்ற உறுப்பினர் றிஸாத் பதியுதீனின் ஏற்பாட்டில்

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத்பதியுதீனின்பணிப்புரைக்கமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தலைமன்னார் தொடக்கம் மன்னார் நகர பகுதி வரையிலான பாதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் முன்னெடுக் கப்பட்டுள்ளது. மேலும் நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு பிர தேச செயலாளர் பிரிவுகளிலும் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த நிவாரணப் பொதியின் அத் தியாவசிய பொருள்கள் உள்ளடங்களாக வழங்கி வைக்கப்பட்டு வருவதோடு, தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் சமைத்த உணவு மற்றும் ஏனைய பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரு தினங்களாகப் பெய்த மழையை அடுத்துக் குளங்கள் பெருக் கெடுத்ததால் மன்னார் மாவட்டம் கடும் பாதிப்புக்களைச் சந்தித்தது.

இந்த நிலையில் பல கிராமங்களுக் கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட் டதால் மக்களுடனான தொடர்புகள் துண் டிக்கப்பட்டன.

இந்த நிலையில் இந்த மக்களுக்குத் தேவையான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய பொருள்களை அவர்களை சென்றடையும் வகையில் முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனின் வழிகாட்ட லில் மனித உரிமை செயற்பாட்டாளர் ஷேக் அமானி ஊடாக வழங்கப்படுகின்றது.





### சாவகச்சேரி பிரதேச செயலக ஒத்துழைப்புடன்

# சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களால் உப்புக்கேணியின் மேலதிக நீர் வெறியேற்றம்!

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாவகச்சேரி நகரசபையின் ஆளணி உதவியுடன் சாவகச்சேரி உப்புக்கேணிக் குளத்தினுடைய மேலதிக நீர் இரண்டு தினங்களாக நீர்ப் பம்பியின் உதவியுடன் கடலுக்கு விடப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்பு தரை வட்டாரத்தில் அமைந்துள்ள மேற்படி குளம் கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக மாரி காலத்தில் நிறைந்து அப்பகுதியில் உள்ள சுமார் 100 குடும்பங்கள் வரை பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி நகரசபை கடந்த மாதம் குளத்தைத் தூர்வாரி நீரின் கொள்ளளவை அதிகரித்திருந்தது. இருப்பினும் அண்மையில் பெய்த கனமழை காரணமாக குளம் நிறைந்து அருகில் உள்ள மக்கள் வெள்ள அனர்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதன்போது மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக அவதானித்த தென்மராட்சிப் பிரதேச செயலர் சத்தியசோதி, சாவகச்சேரி நகர சபையனருடன் இணைந்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் நீர்ப்பம்பியின் உதவியுடன் மேலதிக வெள்ள நீரை கடலுக்குள் கடத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் குளத்தின் மேலதிக நீர் வடிந்தோடும் வாய்க்கால் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடங்களால் முற்றாகத் தடைப்பட்டிருப்பதாலும் அதனை மீள உருவாக்குவதில் பல சவால்கள் காணப்படுவதாலும் உடனடித் தீர்வாக தனியார் காணி ஒன்றின் ஊடாக வெள்ள நீர் கடத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை மேற்படி குளத்துக்கான நிரந்தர வாய்க்கால் அமைக்கும் முயற்சியையும் பிரதேச செயலகம் மற்றும் நகரசபை ஆகியன முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குளத்தின் மேலதிக நீரை கடலுக்கு கடத்தும் செயற்பாட்டுக்கு தென்மராட்சிப் பிரதேசசெயலர் சத்தியசோதி, சாவகச்சேரி நகரசபை தவிசாளர் ஸ்ரீபிரகாஸ், உபதவிசாளர் கிஷோர், கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் சுபேசன், செயலாளர் தர்ஷன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் கிராம மக்கள் நேரடியாக பங்காற்றியிருந்தனர்.

### பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி பெற

# இத்தாலித் தூதரைச் சந்தித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்!



டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட கடுமையான பேரிடர் நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்தாலியக் குடியரசின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக்கை இன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தற்போதைய பேரிடர் சூழ்நிலை காரணமாக எழுந்துள்ள பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பினரும் இதன்போது கவனம் செலுத்தினர். தற்போதைய பேரிடர் நிலைமை, அதன் பின்னர் ஏற்படக் கூடிய பேரிடருக்குப் பிந்திய நிலைமை மற்றும் தொற்றுநோய் நிலைமையைக் கையாள இத்தாலியக் குடியரசால் இந்நேரத்தில் இலங்கைக்குப் பெற்றுத் தர முடியுமான அதிகபட்ச பங்களிப்பைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது கேட்டுக் கொண்டார்.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் வைத்தியசாலைகளின் சேவைகளைப் பேணிச் செல்வதற்கும், சேதமடைந்த ரயில் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வீதிப் போக்குவரத்து கட்மைப்புகளை புனர்நிர்மாணம் செய்வதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது இத்தாலி தூதுவரிடம் உதவி கோரினார்.





# வடக்கில் பேரிடருக்குப் பின்னரான சூழலில் சுகாதார நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இடர் நிலைமையைத் தொடர்ந்து, பேரிடருக்குப் பின்னரான சூழலில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வெள்ளம் வடிந்து மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் இந்தக் காலக்கட்டத்தில், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பது மற்றும் சுகாதாரக் கட்டமைப்பை மீளமைப்பது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான அடிப்படைச் சுகாதார வசதிகளை உறுதி செய்தல் மற்றும் மருத்துவ சேவைகளை ஒருங்கிணைத்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அத்துடன், மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பும் சூழலில், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல் உள்ளிட்ட நோய்த்தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது குறித்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இடர் நிலைமையின் போது மாகாணத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு ஏற்பட்ட பௌதீகப் பாதிப்புகள் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது. குறிப்பாக, சில மருத்துவமனைகளுக்கான தொலைத்தொடர்பு வசதிகள் இன்னும் முழுமையாகச் சீர்செய்யப்படாமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதனைத் துரிதப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, மத்திய சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) மருத்துவர் எஸ். சிறீதரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.








# திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் ரால்குழி பகுதியைத் திருத்த நடவடிக்கை!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் ரால்குழி பகுதியை மீள கட்டமைப்பதற்கு முப்படையினர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் ஆகியோரின் உதவியுடன் முழுமையான முயற்சிகள் இன்று காலை முதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையில் நேரடியாக களத்தில் நின்று செயற்படுகிறார் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா தெரிவித்துள்ளார்.

இந்த வீதி மீள்கட்டமைப்பு நிறைவடைந்த பின்னர் திருகோணமலையில் இருந்து மூதூர் - சேருவில - வெருகல் வரையிலான போக்குவரத்து நிலைமைகள் மீள வழமைக்குத் திரும்பும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

திருகோணமலை மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்த நிலையில், திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான வீதித் தொடர்பு சீர்குலைந்தது.இவ்வீதியின் ஒரு பகுதியே தற்போது மீள சீரமைக்கபட்டு வருகின்றது.




# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக ஏற்பாட்டில் இரத்ததானமும் நிவாரணம் சேகரிப்பும்

(மட்டக்களப்பு நிருபர்)



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாமும், நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் இரத்ததான முகாமும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரணங்கள் சேகரிக்கும் பணி இன்று செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக, டிக்வா புயலின் தாக்கத்தால், நாட்டில் ஏற்பட்ட பேரழிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உருத்திரன் உதயசிறிதர் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணீதரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மாணிக்கப்போடி சசிகுமார், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி த.சபியதாஸ், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை தாதியர்கள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# சென்னையில் 2ஆவது நாளாக விடாமல் தொடரும் கனமழை!

## பொதுமக்கள் அவதி

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இரண்டாவது நாளாக கனமழை விடாமல் பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னை அருகே நீடிக்கும் தாழ்வு மண்டலம் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. சென்னைக்கு கிழக்கே நேற்று மாலை வரை நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று சென்னைக்கு மிக அருகில் வந்து தீவிர தாழ்வு பகுதியாகவும், பிறகு தாழ்வு பகுதியாகவும் செயலிழக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று அதிகாலையில் தொடங்கிய மழை நாள் முழுவதும் கொட்டித் தீர்த்தது. இரவிலும் தொடர்ந்த கனமழை, இன்றும் இரண்டாவது நாளாக விடாமல் பெய்து வருகிறது. சென்னை அண்ணா சாலை, கிண்டி, சைதாப்பேட்டை, வடபழனி உள்ளிட்ட பகுதிகளிலும், தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

இதனால், பல்வேறு பகுதிகளில் சாலையில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியுள்ளதால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். மெட்ரோ ரயில் பணி, மழைநீர் வடிகால் பணி உள்ளிட்ட பணிகளால் பெரும்பாலான சாலைகள் சேரும் சகதியுமாக காட்சியளிக்கின்றன. சென்னையில் உள்ள சில சுரங்கப் பாதைகளில் தண்ணீரை மாநகராட்சி ஊழியர்கள் உடனுக்குடன் வெளியேற்றி வருகின்றனர்.

தொடர் கனமழையால் சாலைகளில் தண்ணீர் தேங்கியதையடுத்து பொதுமக்கள் பலரும் தங்களுடைய கார்களை வேளச்சேரி, ராயபுரம் மற்றும் கோடம்பாக்கம் மேம்பாலங்களில் நிறுத்தி வைத்துள்ளனர்.

# நாகையில் மழையால் பாதித்த பயிர்களுக்கு இழப்பீடு கோரி விவசாயிகள் போராட்டம்!



நாகை மாவட்டம் கீழ்வேளூர் அருகே புயல்- மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி விவசாயிகள் நேற்று மழைநீர் தேங்கிய வயலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டிட்வா புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் பெய்த தொடர் மழையில் 80 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. கீழ்வேளூர் பகுதியில் மட்டும் 20,000 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பாதிக்கப்பட்ட நெற்பயிர்களைக் கணக்கெடுத்து அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கீழ் வேளூர் அருகேயுள்ள வடகரை ஊராட்சியில் மழைநீர் தேங்கியுள்ள நெல் வயலில் இறங்கி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, "மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 35 ஆயிரம் இந்திய ரூபா வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பயிர்களைக் காப்பாற்றுவதற்கான இடுபொருள்கள் வழங்க வேண்டும்.

கடந்தாண்டு பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும். நிகழாண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர வேண்டும்." என முழக்கங்களை எழுப்பினர்.

இந்நிலையில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து வெளியிட்ட அறிக்கையில்,

"நாகைமாவட்டத்தில்மழையால்பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுத்து ஏக்கருக்கு 35 ஆயிரம் இந்திய ரூபா வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்.

மாவட்டத்தில் யூரியா, டி.ஏ.பி, காம்ப்ளக்ஸ் உரங்கள் தட்டுப்பாட்டை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புயலால் தொழில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம் குறித்து அரசியல் இலாபத்துக்காக சீமான் அறிக்கை

## தமிழிசை விமர்சனம்



இலங்கை துயரில் இந்தியா பங்கெடுத்துள்ள நிலையில் அரசியல் லாபத்துக்காக சீமான் அறிக்கை வெளியிட்டுள்ளார் என பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"'டிட்வா' புயலில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு, 'ஒபரேஷன் சாகர் பந்து', அதாவது 'ஒபரேஷன் கடல் நண்பன்' என்ற முயற்சியின் மூலம் பிரதமர் மோடியின் வழிகாட்டுதலில் இந்தியா உதவிக் கொண்டிருக்கிறது.

இந்திய இதயங்கள், இலங்கை துயரங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை பிரதமர் வலிமையாகவே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், இலங்கை தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்று சீமான் போன்றவர்கள் அரசியல் லாபத்துக்காக இன்று அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய அறிக்கைகளும், பொய் உரைகளும் மோடியின் மனிதாபிமானத்தை மறைக்க முடியாது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆசியாவில் 1200 உயிர்களை பலி கொண்டது இயற்கைச் சீற்றம்





அரிய சூறாவளிகளாலும், வட கிழக்கு பருவமழையின் தீவிரத்தாலும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் கடந்த வாரத்தில் வரலாறு காணாத பேரழிவு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி சுமார் 1,200 பேர் பலியாகியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, இந்தோனேசியாவின் சுமத்ரா மற்றும் மலேசியாவைப் பிரிக்கும் மலாக்கா நீரிணைக்கு அருகில் உருவான சென்யார் சூறாவளியினால் இந்தோனேசியாவில் ஆச்சே, வடக்கு சுமத்ரா உள்ளிட்ட மாகாணங்களில் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 15 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வீதிகள் மற்றும் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டதால், பலர் உணவு மற்றும் அத்தியாவசிய உதவிகள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

மேலும், தாய்லாந்தில் 176 பேர் உயிரிழந்ததுடன், மலேசியா போன்ற நாடுகளிலும் பலத்த உயிர்ச்சேதம் பதிவாகியுள்ளன.

இது பூமத்திய ரேகைக்கு மிக அருகில் உருவான ஒரு அரிய நிகழ்வாகும். இதன் விளைவாக, இரு நாடுகளிலும் வரலாறு காணாத வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய மூன்று நாடுகளிலும் ஒட்டுமொத்தமாக 900 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த தீவிர வானிலை நிகழ்வுகளுக்குப் பருவமழை, அரிய சூறாவளிகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் ஆகியவையே காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இதேவேளை, டித்வா சூறாவளியின் தாக்கத்தினால் ஏற்பட்ட மிகக் கடுமையான மழை காரணமாக நேர்ந்த வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் இதுவரையில் 410 பேர் பலியானதுடன், 336 பேர் வரை காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பெரு நாட்டில் நிலச்சரிவு; படகு மூழ்கி 12 பேர் பலி

தென் அமெரிக்க நாடான பெருவில் நிலச்சரிவு காரணமாக இரண்டு படகுகள் மூழ்கின. இதில் 3 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் மாயமாகி உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அந்த நாட்டில் பாயும் அமேசான் ஆற்று படுகையின் படகு துறையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் இதில் நீரில் மூழ்கின. இந்த சம்பவம் அங்குள்ள உகாயாலி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதை அந்நாட்டு பொலிஸ் உறுதி செய்துள்ளதாக அமெரிக்காவில் செயல்படும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மூழ்கிய படகுகளில் எத்தனை பேர் இருந்தனர் என்பது குறித்த உறுதியான தகவல் இன்னும் வெளியாகவில்லை. இருப்பினும் அதில் ஒரு படகில் சுமார் 50 பேர் இருந்தனர் என களத்தில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. இதுவரை உயிரிழந்தவர்களில் 9 பேரின் உடல் மீட்கப்பட்டுள்ளன.

முதற்கட்ட தகவல்களின் அடிப்படையில் 25 பேர் காயமடைந்துள்ளனர் என தெரியவந்துள்ளது. ஆற்றில் பாயும் நீரின் வேகம் மற்றும் நீர் சுழற்சி காரணமாக மீட்பு பணி மிகவும் சவாலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலம் என்பதாலும், சம்பவ இடத்தில் பணி மூட்டம் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 02/12/2025

**குழப்பத்தை ஏற்படுத்தும் அமெ. தூதரின் கருத்து**




C2



# பனிப்பொழிவு தொடர்பில் டொரண்டோவில் எச்சரிக்கை

டொராண்டோவில் இன்று இரவு இரண்டு முதல் நான்கு சென்றி மீற்றர் அளவுக்கு பனி பெய்யக்கூடும் என கனடிய சுற்றாடல் திணைக் களம் அறிவித்துள்ளது.

இந்த பனிப்பொழிவு, வாரத்தின் குளிர்ச்சியான தொடக்கத்துக்கு பின் வருகிறது.

பகல் அதிகபட்ச வெப்பநிலை −1°C ஆக இருக்கும் என்றும், காற்றின் வேகத்தால் −12°C போல உணரப்படும் என்றும் கணிக்கப் பட்டுள்ளது.

இரவு வெப்பநிலை −5°C வரை குறையும். வாரத்தின் மீதிப் பகுதியிலும் மேகமூட்டமும் லேசான பனிப்பொழிவும் காணப்படும் நிலையில், வெப்பநிலை பனி உறையும் நிலையைச் சுற்றியே இருக்கும்.

இதுவரை டொராண்டோ அல்லது அதன் சுற்றுவட்டப் பகுதிகளுக்கு எந்தவித வானிலை எச்சரிக்கைகளும் பிறப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியப் பெண் கணவனைக் கொன்றார் என்ற சந்தேகத்தில் கைது



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் குர்விந்தர் சிங். 2019ஆம் ஆண்டு, கனடாவில் வாழ்ந்துவந்த ரூபிந்தர் கௌர் என்னும் பெண்ணை திருமணம் செய்துகொண்டார் குர் விந்தர்.

திருமணத்துக்குப் பின் கனடா சென். மணப் பெண்ணான கௌர், 2024ஆம் ஆண்டு கனடாவிலிருந்து நாடுகடத் தப்பட்டுள்ளார். அதே நேரத்தில், ஹர்கவல்பிரீத் சிங் என்னும் நபரும் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு, கௌரின் கணவரான குர்விந்தர், தனது வீட்டின் கூரையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.


அதைத் தொடர்ந்து, குர்விந்தரின் சகோதரியான மன்வீர் கௌர், குர்விந்த ரின் மனைவியான ரூபிந்தர் கௌர் மற்றும் அவரது காதலரான ஹர்கவல் பிரீத் சிங் ஆகியோருக்கு எதிராக C2

# குழப்பத்தை ஏற்படுத்தும் அமெ. தூதரின் கருத்து

அமெரிக்க அரசியலின் நடுவில் கனடா தன்னை இணைத்துக் கொண்டதாக கடுமையாக சாடும் கனடாவுக்கான அமெரிக்க தூதுவர் Pete Hoekstra, அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சு வார்த்தைகளை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கு முவெயசழைவின் வரி எதிர்ப்பு விளம்பரத்தையும் குற்றம் சாட்டினார்

இரும்பு வரிகள் அல்லது கனேடிய நாடாளுமன்றத்தை இலக்காகக் கொண்ட ஒருியவசழைவ ஏவுகணை மூலம் கனடாவை இலக்கு வைப்பது அமெரிக்காவிற்கு மிகவும் எளிதாக இருக்கும் என்று நம்பமுடியாத வகையில் தூதுவர் கூறினார்.

Pete Hoekstra வின் இக்கருத்துக்கள் குறித்து சர்வதேச குழப்பத்திற்கு வழிவகுத்த Beaverton இன் கட்டுரையொன்று முதலில் செப்ரெம்பரிக் வெளியிடப்பட்டது. ஆனாலும் இரண்டு மாதங்களுக்கு முன்னரே அது திருத்தப்பட்டு திரும்பப் பெறப்பட்டதாக கூறப்படுகிறது.



இருப்பினும் சமூக ஊடகங்களில் உள்ளவர்கள் இது ஒரு போலியான படைப்பு என்பதைப் புரிந்துகொண்டனர் எனத் தெரிகிறது. ஊடகங்கள் எவ்வாறு எழுதப்படுகின்றன, மக்கள் தங்கள் தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் எவ்வாறு உண்மையை சரிபார்க்கிறார்கள் என்பது குறித்த கவலைகளை இது எழுப்பியுள்ளது.

ஒரு வெளியீடு தங்கள் கட்டுரைகளில் ஒன்றை எடுத்து, அது போலியானது என்பதை உணராமல், அதை அனைத்து தீவிரத்தன்மையுடனும் குறிப்பாகப் பயன்படுத்துவது இது முதல் முறை அல்ல என்று பத்திரிகை துறையினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

# உணவு வங்கியை மூடாமல் இயங்க வைக்க பெண் பாதிரியாரின் சமயோசித நடவடிக்கை



ஸ்காபுரோவிவில் அமைந்துள்ள Church of the Holy Wisdom என்னும் தேவாலயம் சார்பில் ஒரு உணவு வங்கி இயங்கிவந்தது.

தேவாலயத்தில் அத்தியாவசிய கட்டுமானப்பணி செய்யவேண்டி வந்ததால் அந்த உணவு வங்கி மூடப்படும் நிலை உருவானது.

அப்படியானால், இவ்வளவு நாள்களாக உணவு வங்கியை மட்டுமே நம்பியிருந்த மக்கள் என்ன செய்வார்கள் என்ற கவலை அந்த தேவாலய பாதிரியாரான கெர்லின் ஹென்றிக்கு உருவானது. கெர்லின் இந்திய வம்சாவளியினர் ஆவார்.

ஆகவே, தன் கணவரிடமும், தேவாலய நிர்வாகிகளிடமும் பேசிய கெர்லின் ஒரு முடிவு எடுத்தார். அவரது வீட்டில் இருந்த சேமிப்பகம் மற்றும் கார் நிறுத்தும் இடத்திலிருந்த பொருள்களை எல்லாம் அங்கிருந்து அகற்றிவிட்டு, அந்த இடத்தையே உணவு வங்கிக்காக பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்தார் கெர்லின்.

விடயம் என்னவென்றால், ஏற்கனவே அந்த தேவாலய வளாகத்தில் ஓர் உணவு வங்கி இருந்தது. கட்டுமானப் பணிகள் காரணமாக அது மூடப்படும் நிலையில், வேறு எங்காவது கூட உணவு வங்கி திறக்கலாம்.

ஆனால், இவ்வளவு நாள்களாக இந்த உணவு வங்கியைப் பயன்படுத்தியவர்கள் இந்த பகுதியில் உள்ளவர்கள். வேறு எங்காவது உணவு வங்கி திறக்கும்பட்சத்தில், அவர்கள் அந்த உணவு வங்கியைத் தேடிச் செல்லவேண்டியிருக்கும். வாகனங்களை பயன்படுத்த வேண்டிய நிலை வரலாம்.

ஆக, இதே வளாகத்திலிருக்கும் தன் வீட்டிலேயே அந்த உணவு வங்கியைத் திறந்தால், உணவு வங்கியைத் தேடி வந்தவர்கள் ஏமாறவும் மாட்டார்கள், அவர்கள் வழக்கம்போல நடந்தே இங்கு வந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் பாதிரியார் கெர்லின் தீர்மானித்தார்.

ஆக, பாதிரியார் கெர்லினுடைய யோசனையால், மக்கள் அவருடைய வீட்டின் கராஜிலேயே இயங்கும் உணவு வங்கியை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள்.

வாரம் ஒன்றிற்கு 300 பேர் வரை அந்த உணவு வங்கியைப் பயன்படுத்து கின்றனர் எனர் தெரிவிக்கிறார் கெர்லின்.

**கனடாவிலிருந்து...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பொலிஸாரிடம் புகாரளித்துள்ளார்.

மன்வீரும் அவரது பெற்றோர் உட்பட குடும்பத்தினர் அனைவரும் கனடாவில் வாழ்ந்துவருகிறார்கள்.

தன்னிடம் தொலைபேசியில் பேசும் போதெல்லாம் தன் சகோதரரான குர்விந்தர், தன் மனைவி ரூபிந்தர் குறித்து கூறிய சில விடயங்களை பொலிஸில் தெரிவித்துள்ளார் மன்வீர்.

தான் விருப்பப்பட்டு குர்விந்தரை திருமணம் செய்துகொள்ளவில்லை என்றும், கனடாவில் செட்டில் ஆகி வசதியாக வாழ்ந்துவந்த தன்னை தனது விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்துவைத்து விட்டதாகவும் அடிக்கடி குர்விந்தரிடம் கூறிவந்துள்ளார் ரூபிந்தர்.

மேலும், தனது மனைவியான ரூபிந்தர் கனடாவிலிருந்து நாடுகடத்தப்பட்டபோது, அதே நேரத்தில் நாடுகடத்தப்பட்டவரான ஹர்கவல்பிரீத் சிங்குக்கும், ரூபிந்தருக்கும் தவறான உறவு இருப்பதாக தான் சந்தேகிக்கின்றார் எனவும் தன் சகோதரியிடம் தெரிவித்துள்ளார் குர்விந்தர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை, அதாவது, நவம்பர் மாதம் 28ஆம் திகதி தன்னை அழைத்த குர்விந்தர், தன் மனைவியும் அவரது காதலரும் சேர்ந்து தன்னைக் கொன்றுவிட்டு, தங்கள் நிலத்தை அபகரிக்க திட்டமிடுகின்றனர் எனத் தெரிவித்தார் எனக் கூறுகிறார் குர்விந்தரின் சகோதரியான மன்வீர்.

அன்று இரவே, தன் சகோதரர் கொல்லப்பட்டார் எனத் தனக்குத் தகவல் கிடைத்ததாகவும் தெரிவித்துள்ள மன்வீர், உடனடியாக இந்திய பொலிஸாருக்குத் தகவலளித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து, குர்விந்தரின் மனைவியான ரூபிந்தர் கௌர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது காதலர் என சந்தேகிக்கப்படும் ஹர்கவல்பிரீத் சிங் தலைமறைவாகிவிட்டார்.

பொலிஸார், ஹர்கவல்பிரீத் சிங்கை தீவிரமாகத் தேடிவருகிறார்கள்.



# தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கனடாவில் கடினமாக உழைக்கிறார்கள்

கனடாவில் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்கள் கடினமாக உழைக்கிறார்கள், தங்கள் வேலைக்கு உறுதியளிக்கிறார்கள் என்று கனேடியர்கள் கூறுகிறார்கள்.

முன்னாள் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளரான கனேடியர் ஒருவர் கூறும்போது, அவர்கள் உணவகங்களைப் போலவே துயளிநச உள்ள வணிகங்களுக்கும் உதவுகிறார்கள் என்று கூறினார்.

சுழஉமல ஆழரவெயலை நகரம் வெளிநாட்டு தொழிலாளர்களை பெரிதும் நம்பியுள்ள கனேடிய நகரங்களில் ஒன்றாகும். குறிப்பாக பரபரப்பான கோடை காலத்தில், 3,000 பருவகால ஊழியர்கள் வரை இங்கு தேவைப்படுவர்.

மத்தியரசாங்கம் தற்காலிக குடியிருப்பாளர் எண்ணிக்கையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் அதிக மாற்றங்களை திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டம், வெளிநாட்டு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு முன்னர் முதலாளிகள் தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீட்டை (LMIA) சமர்ப்பிக்க வேண்டும் என்று கோருகிறது.

உதாரணமாக, முவவயறய ஏற்கன-வே இந்தத் திட்டத்தை மாற்றியமைத்துள்ளது. எடுத்துக்காட்டாக, அதிக வேலையின்மை உள்ள பகுதிகளில் எல்லைகளை விதித்துள்ளதுடன், ஒரு முதலாளியின் பணியாளர்களை உருவாக்கக்கூடிய தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்களின் சதவீதத்தையும் கட்டுப்படுத்தியுள்ளது.

இருப்பினும், வேலையின்மை அதிகமாக இருப்பதால், குறிப்பாக இளைய கனடியர்களிடையே, தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தின் தாக்கம் குறித்த விவாதம் தொடர்கிறது. ஆனால் புதியவர்கள் இதில் கவனம் செலுத்தும்போது, திட்டம் குறித்த அவர்களின் சிந்தனைகளும் பிரிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.




# கனடாவில் வேலை தேடுவோர் அதிகம் பணியமர்த்தல் வீதமும் கூட அதிகரிப்பு

கனடா முழுவதும் உள்ள மோல்களில் (Malls), மக்கள் சலுகைகளைத் தேடுகின்ற அதேநேரம், ஏனையவர்கள் வேலைகளைத் தேடுகிறார்கள். வேலை தேடும் இணையத்தளமான ஐனெநநன இன் கூற்றுப்படி, கடந்த ஆண்டு இதே காலப்பகுதியை விட இந்த ஆண்டு விடுமுறை பணியமர்த்தல் 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டை விட இது சற்று முன்னேற்றத்தை காட்டுகிறது என்று Indeed மூத்த பொருளாதார நிபுணர் Brendon Bernard கூறினார், ஆனால் 2023 உடன் ஒப்பிடும்போது வேலைவாய்ப்பு பதிவுகள் இன்னும் குறைந்துள்ளனஎனவும்,Jobmarket  வலுவாக இருந்த 2022 ஐ விட மிகவும் குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக வேலை தேடுபவர்களுக்கு இது ஒரு கடினமான காலமாக இருந்து வருகிறது என்று டீநசயெசன கூறுகின்றார். ஒக்ரோபர் மாத நிலைவரப்படி, கனடாவின் வேலையின்மை விகிதம் 6.9 சதவீதமாகவும், 15 முதல் 24 வயதுடைய இளைஞர்களின் வேலையின்மை விகிதம் அதை விட இரு மடங்காக அதாவது 14.1 சதவீதமாகவுன் இருந்தது.

கனடாவில் வேலை தேடும் எவருக்கும் உரிய அறிவுரை என்னவென்றால், தொடர்ந்து விண்ணப்பித்துக் கொண்டே இருங்கள், எந்த வணிகத்திற்கும் நேரில் செல்லத் தயங்காதீர்கள் என்பதாகவே உள்ளது.